தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1982 பிப்ரவரி 6

தை 24, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பகைஅகத்துச் சாவார் எளியர் அரியர்
அவைஅகத்து அஞ்சா தவர்''.

போர் காலத்தில் சாவதற்குத் துணிந்தவர்கள் பலராக இருக்கலாம். ஆனால், அவையிலே அஞ்சாது பேசவல்லார் சிலரே ஆவர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

'மின் வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் தனிமையிடப்படி'

*வினா எண். 61—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்வாரியத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு 'தனிமையிடப்படி' வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம். தனிமையிடப்படி ''தனிமையிடங்கள்'' என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் பணி புரியும் எல்லா மின்வாரிய ஊழியர்களுக்கும் அவர்களுடைய அடிப்படை சம்பளத்தின் அடிப்படையில் ''தனிமையிடப்படி'' வழங்கப்படுகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குந்தா, கோவையாறு, சுருளியாறு போன்ற பகுதிகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு 1–11–1979 லிருந்து தனிமையிடப்படி' தரப்படுவதாகவும் அதற்கு முன்னால் 1–12–74 லிருந்து 31–10–79 வரையில் தரப்படவில்லை என்றும்

நான் அங்கு சென்றிருந்தபோது ஊழியர்கள் தெரிவித்தார்கள். அதையொட்டி எழுப்பப்பட்டது இந்த கேள்வி. இப்போது அங்கே அந்த தனிமையிடப்படி தரப்படுகிறதா என்பதையும் 1-12-74 முதல் 31-10-79 வரை தரப்படாமல் இருந்தால் அதற்கு என்ன காரணம் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனிமையிடம் என்று அறிவிக்கப்பட்ட பிறகு அந்த 'தனிமையிடப்படி' வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குத் தரப்படவில்லை என்றால் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் அவை தனிமையிடம் என்று அறிவிக்கப்படாமல் இருந்திருக்கலாம்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, தனிமையிடம் என்று அறிவிக்கப்பட்ட பகுதி என்று, ஐசலேட்டட் ஏரியா என்று, அறிவிக்கப்பட்ட பகுதிதான் அது என்றும், ஆனால் அதற்கு முன்னால் 59 மாதங்களுக்கு அந்த தனிமையிடப்படி தரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போது தெரிவித்திருக்கிற பதிலிலிருந்து ஒருகால் இப்போது தரப்பட்டாலும் தரப்படலாம். அப்படித் தரப்படாமல் இருந்தால் அதைத் தருவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எல்லோருக்கும் தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு புதிய கருத்தை இப்போது இங்கே தெரிவிக்கிறார்கள். 1974 முதல் 1979 வரையில் குந்தா, கோதையாறு, சுருளியாறு பகுதிகளில் தரப்படவில்லை என்ற புதிய தகவலைச் சொல்கிறார்கள். அது பற்றி ஆராயப்படும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவரவர்களே, இந்த தனிமையிடப்படி என்பது எந்தெந்த இடங்களில் கொடுக்கப்படுகிறது என்பதோடு எந்தெந்த தேதியிலிருந்து அது அமுலுக்கு வந்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்சார வாரியம் உருவானதிலிருந்து தனிமையிடப்படி அளிக்கப்படுகிறது. தனிமையிடங்கள் மொத்தம் 30 இருக்கின்றன. பல்வேறு பணிகள் ஆரம்பிக்கப்படுகிறபோது, மலைப்பகுதிகளாக இருந்தால், எளிதில் செல்ல முடியாமல் இருக்கும்போது அந்த இடங்கள் எல்லாம் தனிமையிடங்கள் என்று அறிவிக்கப்படுகின்றன.